ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
Buddhist Civilization I

45 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. இருக்கு வேதத்திலுள்ள நிர்மாணவாதத்திற்கிணங்க மனித வர்க்கத்தின் சாதி வேறுபாட்டு (வர்ண பேதம்) நியதிக்கமைவான உருவாக்கம் தொடர்பாகப் பயன்படுத்திய உற்பத்தி ஸ்தானங்கள் முறையே அமைவது,
   (1) முகம், இரண்டு தோள்கள், இரண்டு கைகள், இரண்டு பாதங்கள்
   (2) முகம், இரண்டு தோள்கள், இரண்டு கைகள், இரண்டு தொடைகள்
   (3) முகம், இரண்டு தோள்கள், இரண்டு கைகள், இரண்டு கால்கள்
   (4) முகம், இரண்டு கைகள், இரண்டு தொடைகள், இரண்டு பாதங்கள்
   (5) முகம், இரண்டு தோள்கள், இரண்டு தொடைகள், இரண்டு பாதங்கள்

2. இந்திய சமூகத்தில் சகல அம்சங்களிலும் தமது அதிகாரத்தைச் செலுத்திய பிராமண குலம் மிகப் பிரபலமாகத் தமது அதிகார பலத்தை செலுத்தியது,
   (1) சமய, அரசியல் துறைகளிலாகும். (2) சமய, பொருளாதாரத் துறைகளிலாகும்.
   (3) சமய, உற்பத்தித் துறைகளிலாகும். (4) சமய, கல்வித் துறைகளிலாகும்.
   (5) சமய, நிர்வாகத் துறைகளிலாகும்.

3. சாதி வேறுபாட்டிற்கமைவாக மரபுரீதியான தொழில் வாய்ப்பு முறைமையைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக விசேடமான நியமமொன்றை பிராமண போதனைகளில் காணலாம். அதனை எவ்வாறு அழைப்பர்?
   (1) வர்ண தர்மம் (2) ஆச்சிரம தர்மம் (3) ஆபத் தர்மம் (4) பிராமண தர்மம் (5) ஸ்வதர்மம்

4. பிராமண போதனைகளின்படி பிராமண பூசகரும் உரிய வயதில் திருமணம் செய்துகொள்வது அவசியமாகும். இந்நியதியின் அடிப்படையாக அமைவது,
   (1) மகன் விவாகமாகி மகனைப் பெற்றால் தந்தை நரகத்துக்கு செல்வதைத் தவிர்த்தல்
   (2) யாக காரியங்கள் தொடங்கும்போது சுத்தமான நீரைக் கொண்ட நீர்க்கெண்டியைப் பூசகரான பிராமணரின் மனைவியின் கையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளமை
   (3) யாகம் நிறைவுறும்வரை பூசகரான பிராமணரின் இடப்பக்கத்தில் மனைவி அமர்ந்திருக்க வேண்டியுள்ளமை
   (4) ஏனைய குலத்துப் பெண்களுக்குக் கிடைக்காத விசேட வரப்பிரசாதமொன்றை பிராமண குலப் பெண்களுக்கு வழங்குதல்
   (5) உரிய வயதில் விவாகமாகி இந்திரிய சுகத்தை அடையாத மனிதன் உண்மையான ஆண்மகனாக ஏற்றுக் கொள்ளப்படாமை

5. பிராமண கலாசாரத்தின் அடிப்படையான சாதிவேறுபாட்டினை நேரடியாக மறுக்கும் வகையில் புத்தர் போதித்த சூத்திரமாவது,
   (1) பராபவ சூத்திரம் (2) அனத்த லக்கண சூத்திரம்
   (3) வஸல சூத்திரம் (4) அரிய பரியெஸன சூத்திரம்
   (5) வியக்க பஜ்ஜ சூத்திரம்

6. துறவு, இல்லற சமூகம் இரண்டிலுமே பெண்களுக்கு உரிய இடமளித்தலை ஒப்புக்கொள்ளும் புத்த சமயம் தாய்மைக்கு மதிப்பளிப்பது சம்பந்தமாக எடுத்துக் கூறக்கூடிய சிறந்த உதாரணம்,
   (1) பெண்களுக்கு புத்த சாசனத்தில் துறவியாவதற்கு அனுமதியளித்தல்
   (2) தனது பிள்ளை இறந்து போனதால் பெரும் துக்கமடைந்திருந்த கிசாகோதமிக்கு உதவுதல்
   (3) தாய் 'பிரஹ்ம' என்ற பெயரால் அழைக்கப்படுதல்
   (4) பிரஜாபதி கோதமியை அஷ்ட உயர் தர்மத்தைக் கடைப்பிடிக்கச் செய்தல்
   (5) ராகுலரின் தாய்க்கு பிக்குணித் துறவை வழங்குதல்

[பக். 2 ஐப் பார்க்க

7. புத்தர் காலத்து இந்திய பிராமண, சமண கலாசாரங்களை ஒப்பிடுவதன் மூலம் கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளுள் மிகவும் சரியான கூற்றாக அமைவது,
   (1) பிராமண கலாசாரம் தெய்வ நிர்மாணவாதத்தைப் புறக்கணிக்கும் அதேவேளை சமண கலாசாரம் அதனை ஏற்றுக்கொள்கின்றது.
   (2) பிராமண கலாசாரம் ஆத்மவாதத்தை மறுக்கும் அதேவேளை சமண கலாசாரம் அதனை ஏற்றுக்கொள்கின்றது.
   (3) பிராமண கலாசாரம் மனிதனின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு அவனை வர்க்கப்படுத்துகின்றது. சமண கலாசாரம் அதனை மறுக்கின்றது.
   (4) பிராமண கலாசாரமும் சமண கலாசாரமும் மனிதனது சமய சுதந்திரத்தை மதிக்கின்றன.
   (5) பிராமண கலாசாரமும் சமண கலாசாரமும் பெண்களின் சுதந்திரத்தை மதிக்கின்றன.

8. புத்தர் காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த ஆறு குருமார்களுள் நியதி பரிணாமத்தினால் வீடுபேறு கிட்டும் எனப் போதித்தவர்,
   (1) மக்கலீ கோஸால (2) அஜித கேஷகம்பலீ
   (3) பூரண கஸ்ஸப (4) பகுத கச்சாயன
   (5) சஞ்ஜய பெல்லட்டிபுத்த

9. புத்தர் காலத்தில் இந்தியாவில் நிலவிய நிர்வாக முறைமை தொடர்பிலான மிகச் சரியான கூற்றாவது,
   (1) வைசாலியைத் தலைநகரமாகக் கொண்ட வஜ்ஜி ராச்சியம் பிரபலமானதொரு ராச்சியமாகும்.
   (2) ரஜகஹநுவரவைத் தலைநகரமாகக் கொண்ட மகத ராச்சியம் ஒரு கணதந்திர ராச்சியமாகும்.
   (3) சிராவஸ்தியைத் தலைநகராகக் கொண்ட கோசல ராச்சியம் ஒரு சிறு ராச்சியமாகும்.
   (4) குசினாராவவைத் தலைநகராகக் கொண்ட மல்ல ராச்சியம் கணதந்திர ராச்சியமாகும்.
   (5) உதேனியவைத் தலைநகராகக் கொண்ட அவந்தி ராச்சியம் ஒரு குடியரசு ஆகும்.

10. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்திய சமூகம் துரித பொருளாதார அபிவிருத்தியுடன் வர்த்தக மயமாக்கம், நகர்மயமாக்கம் ஆகியவற்றிற்கும் உட்பட்டிருந்ததென்பது பல்வேறுபட்ட ஆதாரங்கள் மூலம் உறுதியாகின்றது. அவற்றில் செயற்றிறன் மிக்கவர்களாக கருதக்கூடியவர்களாக இருந்தவர்கள்,
   (1) அரசர்கள் (2) செட்டிகள்
   (3) நிலச் சொந்தக்காரர்கள் (4) தொழிற்சாலை உரிமையாளர்கள்
   (5) அரச உத்தியோகத்தர்கள்

11. “இந்திரிய உணர்வுக்கு அப்பாற்பட்ட எல்லாம் வல்ல ஒருவராலோ அல்லது ஒரு சக்தியினாலோ பிராணிகளும் உலகமும் படைக்கப்பட்டு ஆளப்படுகின்றது” என்பதன் மூலம் கருதப்படுவது,
   (1) ஈஷ்வர நிர்மாணவாதம் (2) பரிணாமவாதம்
   (3) நியதி வாதம் (4) புப்பேகத காரணவாதம்
   (5) அதிச்ச சமுப்பன்னவாதம்

12. சமூக நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி பிராமணர்களும் சமணர்களும் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர். அவற்றில் சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி என்பன தனிப்பட்டவரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் பயனாக உருவாகியதெனும் கருத்தினைத் தெரிவித்தவர்கள்,
   (1) நிர்மாணவாதிகள் (2) அகேது அப்பச்சயவாதிகள்
   (3) காரணவிளைவுவாதிகள் (4) புப்பேகத காரணவாதிகள்
   (5) நியதிவாதிகள்

13. பரஸ்பர நல்லெண்ணம், நட்பு என்பவற்றை ஏற்படுத்துவதற்கு உதவும் பல சமூக தர்மங்கள் புத்த சமயத்தில் உபதேசிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமான சமூக தர்மமாகக் கருதப்படக் கூடியது,
   (1) கற்றோருடன் உறவாடல் (2) தியாகம் செய்யும் தன்மையுடைமை
   (3) எப்போதும் தர்மத்தைச் செவிமடுத்தல் (4) சிற்ப சாஸ்திரங்களைக் கற்றல்
   (5) ஒழுக்கத்துடன் வாழல்

14. கடமை, பொறுப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தொடர்பு வலைப்பின்னலொன்று ஏற்படுவதாக சிகாலோவாத சூத்திரத்தில் கூறப்படுவதன்படி மாணவன் குருவுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமையாவது,
   (1) நாளாந்த கடமைகளைச் செய்தல் (2) நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தல்
   (3) இனிய வார்த்தைகளால் உபசரித்தல் (4) ஆபத்து வேளையில் கைவிடாமலிருத்தல்
   (5) நற்பண்புகளை விபரித்தல்

15. ஒருவரின் சுதந்திரம், சுயாதீனம், பொறுப்பு என்பவற்றை வெளிப்படுத்தும் மிகச் சரியான கூற்றாவது,
   (1) மற்றவர்களையும் தன்னைப் போல நினைத்து துன்புறுத்தாதிருத்தல்.
   (2) பாவம் செய்பவன் இரு உலகங்களிலும் துன்புறுவான்.
   (3) நல்லவற்றை நல்லதாகவும் தீயனவற்றை தீயனவாகவும் காணவேண்டும்.
   (4) சிந்தனைகளே செயலாகும் என்ற தன்னுணர்வோடு செயற்பட வேண்டும்.
   (5) தனக்குத்தானே தஞ்சம் அன்றி வேறு தஞ்சம் கிடையாது.

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

16. "வெசக் பௌர்ணமி தினத்தன்று அதிகாலை விகாரைக்குச் சென்ற சீலவதி எனும் உபாசிகை விகாரை முற்றத்தைத் துப்பறவுசெய்து பல மலர்த்தட்டுகளைத் தயார்படுத்தி புத்த பூஜைக்கு ஏற்பாடு செய்தாள். நிறைந்து வழிந்தோடுமாறு விளக்குகளில் எண்ணெய் இட்டு விளக்கேற்றியதுடன் விகாரை அமைந்துள்ள பகுதியை புகையினால் நிரப்பும் அளவிற்கு ஊதுபத்திக் கட்டு ஒன்றைப் பற்ற வைத்தாள். அதன்பின் உரத்த குரலில் சீலவதி உபாசிகை குறித்த இடத்தில் புத்த பூஜையை நடாத்தி நீண்டநேரம் பாடல்கள் பாடி வணங்கினாள்."
இந்த விபரங்களின்படி அவள் சம்பந்தமாக கூறக்கூடிய மிகச் சரியான கூற்றாவது, சீலவதி
(1) மும்மணிகளில் எல்லையற்ற நம்பிக்கை சிரத்தை கொண்டவள்.
(2) மும்மணிகளில் எல்லையற்ற பக்தி கொண்டவள்.
(3) மும்மணிகளில் அசையாத சிரத்தை கொண்டவள்.
(4) புண்ணியத்தைப் பெருக்குவதில் மதிநுட்பம் கொண்டவள்.
(5) பக்தி சிரத்தையும் அதேயளவு நுண்ணறிவும் கொண்டவள்.

17. "நாட்டுமக்களினது பாதுகாப்பு மற்றும் பேணிக்காத்தல் மட்டுமன்றி பொருளாதார அபிவிருத்தி, குற்றத்தடுப்பு, சமாதானம், ஒற்றுமை என்பனவும் ஒரு அரசின் அபிவிருத்திக் குறிக்கோளை வெற்றி கொள்வதில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவ்வாறே ஆட்சியாளரின் தற்றுணிவான நன்மைபயக்காத தீர்மானம் எடுப்பதனால் நாட்டுக்கு ஏற்படும் தீமைகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக கர்வமற்ற, காலம் தாழ்த்தாத, வணக்கத்திற்குரிய அறிவுடையோரின் அறிவுரை, புத்திமதிகளைக் கேட்க வேண்டும்." இந்தப் பகுதியின் உள்ளடக்கத்தை பௌத்த அரசியல் கோட்பாடாக இனங்காணக்கூடியது,
(1) தசராஜ தர்மங்கள் (2) தசசக்விதிவத்
(3) ஸப்த அபரிகானீய தர்மங்கள் (4) பஞ்சசீல பிரதிபதா
(5) நான்கு முறையின்மைகளைத் தவிர்த்தல்

18. சுதந்திரமாகவும் பக்கச்சார்பின்றியும் தீர்மானம் எடுத்தல் என்பது நல்லதொரு ஆட்சியில் காணக்கூடிய பிரதான லட்சணமாகும். இதற்காக ஆட்சியாளனொருவன் சுதந்திரமானதும் தாராளமானதுமான உள்ளத்துடன் தன் எண்ணங்களை நெறிப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு நேரடியாக உதவும் பௌத்த அரசியல் கோட்பாடாக இனங்காணக் கூடியது,
(1) தசசக்விதிவத்களைப் பின்பற்றுதல்
(2) தசராஜதர்மத்திற்கேற்ப ஆட்சி செய்தல்
(3) பஞ்சசீல பிரதிபதாவில் விதிக்கப்பட்டவாறு செயற்படுதல்
(4) நான்கு முறையின்மைகளைத் தவிர்த்துச் செயற்படல்
(5) நான்கு வகை 'சங்கிரக வஸ்து' வினால் மக்களுக்கு ஆதரவளித்தல்

19. "இல்வாழ்வான் குறைந்த வருமானத்தையுடையவனாக இருந்துகொண்டு அதிகமாகச் செலவு செய்து 'திம்புல்' பழம் உண்பவன் போன்று செல்வத்தை அனுபவித்து, தன்னை அழிக்கிறான்" என்றும், "அதிக வருமானம் இருந்தும் துன்ப வாழ்க்கை வாழ்வதுடன் அவன் உண்ணாமலே இறக்கின்றான்" என்றும் மக்கள் கூறுவர். மேற்படி இரு கூற்றுகளாலும் கூறப்படுவது,
(1) போக சுகம் பற்றிய கருத்தாகும்.
(2) போக அழிப்பு வாயில் பற்றிய கருத்தாகும்.
(3) செல்வம் சம்பாதித்தல் பற்றிய கருத்தாகும்.
(4) வளங்களைப் பாதுகாத்தல் பற்றிய கருத்தாகும்.
(5) வளங்களை முகாமைத்துவம் செய்தல் பற்றிய கருத்தாகும்.

20. வீட்டுடன் தொடர்புடைய பிரதிபதாவிற்குரிய பௌத்த மூலாதாரத்தின்படி பெண், மது, சூது என்பவற்றில் ஈடுபடாதிருத்தல் நல்ல நண்பர்களோடு இணங்குதல் ஆகிய விடயங்கள் நேரடியாக ஒருவரின்,
(1) பொருளாதார அபிவிருத்திக்கு ஏதுவாகும்.
(2) மறு உலக முன்னேற்றத்துக்கு ஏதுவாகும்.
(3) நிர்வாணம் அடையும் வழிமுறைக்கு ஏதுவாகும்.
(4) பிறர்நலம் கருதும் பழக்கத்திற்கு ஏதுவாகும்.
(5) விழுமிய அபிவிருத்திக்கு ஏதுவாகும்.

21. பொருளாதாரச் செழிப்பு இல்லற வாழ்க்கைக்கு அவசியமானதொன்று என்பதை ஏற்றுக்கொள்ளும் புத்த சமயம் அதற்காக அறவழியிலான நடைமுறைகளையும் பிரேரிக்கின்றது. அதேபோன்று சம்பாதிக்கப்படும் செல்வத்தை கவனமாகவும் சரியான நோக்கத்துடனும் உபயோகிக்க வேண்டும் என்றும் எடுத்துக்கூறுகிறது. அதன்படி ஒருவர் அறவழியில் சம்பாதித்த செல்வத்தை,
(1) விருப்பத்திற்கேற்ப பயன்படுத்துதல் வேண்டும்.
(2) கொடை முதலான நற்செயல்களுக்காகவே செலவிட வேண்டும்.
(3) தவறான முறைகளால் ஏற்படும் விளைவுகளை அறிந்து பயன்படுத்துதல் வேண்டும்.
(4) மென்மேலும் விருத்தி செய்து கொண்டு பயன்படுத்துதல் வேண்டும்.
(5) பாதுகாப்பாக வைப்பதற்காக அதிகப்படியான பகுதியை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

22. 'ஸிவு ஸங்கராவத' என்பது, இல்லறத்திலோ துறவறத்திலோ உள்ள எந்தவொருவரும் தான் சார்ந்த சமூகம் நல்ல விதத்தில் அமைவதற்குப் பெரிதும் உதவும் பெறுமதி வாய்ந்ததொரு முறையாகும். அவ்வாறே ஆட்சியாளர் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய பௌத்த அரசியல் கோட்பாடாகவும் கருதப்படுகின்றது. இந்த நால்வகைப் படிமுறைகளுள் 'அத்தசரியா' என்பதனால் கருதப்படுவது,
(1) தனது பொருளின் பொருட்டு செயற்படுதல் (2) தனதும் மற்றவரதும் பொருளுக்காக உற்சாகம் கொண்டிருத்தல்
(3) பிறரின் நலனுக்காகச் செயற்படுதல் (4) எல்லோரையும் சமமாகக் கருதுதல்
(5) மக்களின் அறநெறியைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படல்

23. வெறுங்கையுடன் வந்து நண்பரிடம் ஏதாவது எடுத்துச் செல்வதற்கு எதிர்பார்க்கும், அற்ப பொருளைக் கொடுத்துவிட்டு அதிகமாக எதையாவது பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும், தமக்கு பயம் ஏற்படும்போது மட்டும் நண்பனை அணுகும் தனது தேவைக்காகவே செயற்படும் நண்பன் எவ்வாறு அழைக்கப்படுவான்?
(1) அஞ்ஞதத்துஹர (2) வசீபரம (3) அனுப்பியபாணீ
(4) அபாய ஸஹாய (5) அத்தக்காயி

24. சிகாலோவாத சூத்திரத்திலுள்ள பௌத்த சமூக ஒழுக்க தர்மப்படி தானம் செய்தல், இனிய வார்த்தை பேசுதல், நல்வாழ்வு, சமத்துவம், ஏமாற்றாமை ஆகியவற்றினால் குலமகன் ஆதரிக்க வேண்டியது,
(1) துறவிகளை (2) குருமார்களை (3) தாய் தந்தையரை
(4) நண்பர்களை (5) ஆண், பெண் தொழிலாளர்களை

25. "மூவாயில் ஒழுக்கமுடைய புராதன இலங்கையர் உயிர் வதை, பிராணிகளைத் துன்புறுத்தல் ஆகியவை செய்யாதிருந்தார்கள். இன்னொருவரின் பொருளையிட்டு உள்ளத்தினால்கூட ஆசை கொள்ளாத அவர்கள் புத்தசமயம் அங்கீகரிக்கும் அறவழி தொழில் சுகத்தை மட்டும் அனுபவித்தார்கள். உண்மை வார்த்தையை மதித்து அறவழியிலான பேச்சுகளில் மட்டும் ஈடுபட்டிருந்தனர். எந்தவொரு பொருளிலும் கடும் ஆசை கொள்ளாத அவர்கள் பகைமையின்றி அன்புணர்வுடன் புண்ணியச் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டு ஆறுதலளிக்கும் வாழ்வை வாழ்ந்தார்கள்."
இந்தப் பந்தியின்படி புராதன இலங்கை பௌத்தர்கள்,
(1) தஸ பின்கிரியவத்துவைப் பூர்த்தி செய்தார்கள்.
(2) பத்து பாவச் செயல்களைத் தவிர்த்திருந்தார்கள்.
(3) தஸ பாரமிதா வை நிறைவு செய்தார்கள்.
(4) தஸ சில் அனுஷ்டித்து காலங்கழித்தார்கள்.
(5) தஸ சங்யோஜன பிரஹான செய்தலில் ஈடுபட்டிருந்தார்கள்.

26. பின்வருவனவற்றுள் பௌத்த கற்பித்தலின்படி நல்லது, கெட்டதைத் தீர்மானிப்பது பற்றிய மிகச் சரியான நியதியாகக் கொள்ளக்கூடியது,
(1) பாரம்பரியமாக நிலவி வருவதை சரியானதென ஏற்றுக்கொள்ளல்
(2) திரிபிடக நூல்களில் காட்டப்படும் விவரணம் சரியானதென ஏற்றுக்கொள்ளல்
(3) ஆசிரியர் கற்பித்த விடயம் சரியானதென ஏற்றுக்கொள்ளல்
(4) தனது நியாயத்திற்கும் தர்க்கத்திற்கும் ஏற்ற விடயம் சரியானதென ஏற்றுக்கொள்ளல்
(5) சுயமான சிந்தனைக்கும் மனச்சாட்சிக்கும் ஏற்ற விடயம் சரியானதென ஏற்றுக்கொள்ளல்

27. எட்டுவகை தர்மங்களினால் (அடலோ தஹம்) கலங்காதிருப்பதற்கு சிஷ்யர்களுக்கு அறிவுரை கூறிய புத்தர், தன்னை வந்தடைந்த இலாபம்-நட்டம், போற்றுதல்-தூற்றல், புகழ்ச்சி-இகழ்ச்சி, சுகம்-துக்கம் ஆகியவற்றின்போது ஒரு போதும் ஏக்கமோ, கலக்கமோ அடையாது பெரும் மாதிரியாக வெளிப்பட்டு நின்றார். புத்தர் வரலாற்றின் மூலம் வெளியாகும் இந்த விசேட குணப்பண்பு அறியப்படுவது,
(1) பத்மாகார ஜீவிதம் என்றாகும். (2) யதாவாதீ ததாகாரீ குணம் என்றாகும்.
(3) தாதீ குணம் என்றாகும். (4) அரகம் குணம் என்றாகும்.
(5) லோகவிது குணம் என்றாகும்.

28. சித்தார்த்தர் சம்புத்தத்துவத்தை அடைந்தபோது பெற்ற சர்வஞ்ஞதா ஞானத்துடன் அஷ்ட வித்யா ஞானத்தையும் பெற்றுக் கொண்டாரென புத்தரின் வரலாற்றில் காணப்படுகின்றது. இந்த ஞானங்களுக்குரியதான 'திப்ப சக்கு ஞானம்' என்பது,
(1) முன்னைய பிறப்புகள் பற்றி அறிதல் தொடர்பானது.
(2) தெய்வங்களின் மனங்களில் உள்ளவற்றைக் காணும் ஞானமாகும்.
(3) மனிதர்களின் உள்ளங்களிலுள்ளவற்றைக் காணும் அறிவாகும்.
(4) பிராணிகளின் பிறப்பையும் இறப்பையும் அறிந்து கொள்ள உதவும் ஞானமாகும்.
(5) உலகத்தை யதார்த்தபூர்வமாகக் காணும் அறிவாகும்.

29. புத்தர் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தனது சிஷ்ய சிஷ்யைகளின் திறமைகளை மதித்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கினார். அதன்படி, 'சிரராத்ரஞ்ஞு' பிக்குகளுக்கான உயரிய பதவி அஞ்ஞா கொண்டஞ்ஞ பிக்குவுக்கு வழங்கப்பட்டது. இங்கு 'சிரராத்ரஞ்ஞு' என்பதனால் கருதப்படுவது,
(1) தெய்வீகக் கண்களைப் பெற்றிருத்தல்
(2) இனிய குரலில் தர்மபோதனை செய்யக்கூடிய தன்மை
(3) பெரும் சிஷ்ய கூட்டத்தினருக்குத் தலைமை தாங்கியமை
(4) மனோரீதியாக உருவங்களைத் தோற்றுவிக்கும் வல்லமையுள்ளமை
(5) வயதில் கூடிய நிலைமை

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

30. பிக்கு சங்கம் விரும்பினால் சிறு சிறு விதிகளை மாற்றிக் கொள்வதற்கு புத்தர் அனுமதி கொடுத்திருந்தாலும் வழங்கப்பட்டுள்ள ஒழுக்க விதிகளை மாற்றம் ஏதுமின்றி அதன்படி அவ்வாறே நடைமுறைப்படுத்துவதற்கு முதலாவது பௌத்த சபையில் பங்கேற்ற பிக்குகள் தீர்மானித்தனர். இவ்வாறு சிறு சிறு விதிகளை மாற்றாததற்கு பிரதான ஏதுவாயமைந்தது,
(1) ஆனந்த தேரரின் எதிர்ப்பு
(2) உலக அபவாதத்துக்கு உட்படுவதைத் தவிர்த்தல்
(3) புத்த நியமத்தைக் கடக்க முடியாமை
(4) விநயதர உபாலிதேரரின் விருப்பமின்மை
(5) சபைக் கூட்டத்தின்போது இதுபோன்ற பிரச்சினையொன்று கலந்துரையாடப்படாமை

31. புத்தர், முதலாவது சமய தூதுக் குழுவினரை நோக்கி, தெய்வ, மனித சுகத்தை முன்னிட்டு ஆரம்பம்-மத்தி-முடிவு ஆகியவற்றில் நன்மையானதும் பரிசுத்தமானதுமான தர்மத்தை உபதேசிக்கும் படியும் ஒரு வழியில் இருவர் போக வேண்டாமென்றும் எச்சரித்தார். இதனால் அவர் எதிர்பார்த்தது யாதெனில்,
(1) சிஷ்ய தொகுதியினரின் பாதுகாப்பு
(2) சிஷ்யர்களைத் தனிமையான வாழ்க்கைக்குப் பழக்கப்படுத்துதல்
(3) பெரும் தொகையினருக்கு விரைவில் தர்மம் பற்றிய செய்தியை வழங்குதல்
(4) சிஷ்யர்களிடையே கருத்து முரண்பாட்டுப் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்த்தல்
(5) பிக்குகளை நாடோடி வாழ்வுக்குப் பழக்கப்படுத்துதல்

32. முதலாவது பௌத்த மகாசபையின்போது தர்மம் ஒழுக்கம் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக புத்தரின் வாய்மொழிகள் அனைத்தும் நூல்களாகப் பிரிக்கப்பட்டன. அதன்போது தொகுக்கப்பட்டது,
(1) பராஜிக பாளி, பாசித்திய பாளி, சுல்லவக்க பாளி, மகாவக்க பாளி, பரிவார பாளி என்றவாறாகும்.
(2) தம்மஸங்கணீ, விபங்க, தாதுகதா, புத்கல பஞ்ஞத்தி, யமகப்பகரண என்றவாறாகும்.
(3) தீக நிகாய, மஜ்ஜிம நிகாய, ஸங்யுக்த நிகாய, மகாவக்க பாளி, பரிவார பாளி என்றவாறாகும்.
(4) தீக நிகாய, மஜ்ஜிம நிகாய, சங்யுக்த நிகாய, அங்குத்தர நிகாய, குத்தக நிகாய என்றவாறாகும்.
(5) தீக நிகாய, மஜ்ஜிம நிகாய, சங்யுக்த நிகாய, பராஜிக பாளி, பாசித்திய பாளி என்றவாறாகும்.

33. 'தச அகப வஸ்து'வில் காட்டப்படும் 'காமந்தர கப்ப' என்பதனால் கருதப்படுவதாவது,
(1) இரண்டு கிராமங்களில் யாசகம் செய்வதன் பொருத்தப்பாடு
(2) ஒருமுறை உண்ட பின்னர் மீண்டும் இன்னொரு கிராமத்தில் உண்ணுதலின் பொருத்தப்பாடு
(3) ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்துக்கு உப்பு எடுத்துச் செல்வதன் பொருத்தப்பாடு
(4) ஒரு கிராமத்தில் இரண்டு முறை உண்பதன் பொருத்தப்பாடு
(5) கிராமங்களூடாகப் பிரயாணம் செய்யும்போது பலமுறை உண்பதன் பொருத்தப்பாடு

34. மொக்கலீ புத்த திஸ்ஸ தேரரினால் 'கதாவத்து' ஆக்கப்பட்டது மூன்றாவது பௌத்த மகாசபையின் முக்கியமானதொரு விளைவாகும். கதாவத்துவின் உள்ளடக்கம் பற்றிய பின்வரும் கூற்றுகளுள் மிகச் சரியான கூற்றாவது,
(1) பிக்குகளின் ஒழுக்கத்தை முறையாக நடத்துவதற்காக ஆக்கப்பட்ட விநயபிடகத்துக்குரிய நூலாகும்.
(2) தர்ம பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் ஆக்கப்பட்ட சூத்திரபிடகத்துக்குரிய ஆக்கமாகும்.
(3) பரவாத கருத்துகளுக்காக ஆக்கப்பட்ட திரிபிடகங்களுக்கு உரித்தாகாத நூலாகும்.
(4) மூன்றாவது பௌத்த மகாசபை பற்றிய விபரமான தகவல்களை வழங்கும் மூலாதார நூலாகும்.
(5) ஏனைய நிகாயாக்களின் கருத்துகளிலுள்ள தவறுகளை எடுத்துக்காட்டி தேரவாதக் கருத்தினை உறுதிப்படுத்தும் வகையில் ஆக்கப்பட்ட அபிதர்மபிடகத்துக்குரிய நூலாகும்.

35. புராதன இந்தியாவின் புகழ்வாய்ந்த பல்கலைக்கழகங்களுள் மகாயானம் **அல்லாத** பௌத்த நிகாயாக்களுக்குரிய நிறுவனமாக இனங்காணப்பட்டிருப்பது,
(1) வலபி பல்கலைக்கழகம்
(2) தக்ஷிலா பல்கலைக்கழகம்
(3) விக்ரமசீலா பல்கலைக்கழகம்
(4) ஓதந்தபுரீ பல்கலைக்கழகம்
(5) நாலந்தா பல்கலைக்கழகம்

36. பண்டுகாபய மன்னனின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் வணக்கத்துக்குரியனவாகக் கருதப்பட்டிருந்த இரண்டு மரங்களாவன,
(1) ஆலமரமும் அரசமரமும் ஆகும்.
(2) ஆலமரமும் நாகமரமும் ஆகும்.
(3) பனைமரமும் ஆலமரமும் ஆகும்.
(4) பனைமரமும் அரசமரமும் ஆகும்.
(5) அரசமரமும் நாகமரமும் ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

37. மகிந்ததேரரால் இலங்கைக்கு புத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பெருமளவிலான பெண்களும் ஆண்களும் 'நிர்வாண' மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதற்காக புத்த சமய அங்கீகார துறவு நிலை பெற முன்வந்தனர். அவ்வாறு துறவு பூண அனுமதி கோரிய இளவரசி அனுலா உள்ளிட்ட அரச பெண்களுக்கு துறவு அங்கீகாரம் வழங்க மகிந்ததேரர் **முன்வராமைக்குக்** காரணமாவது,
(1) பெண்ணை பிக்குணி நிலைப்படுத்துவதனால் இலங்கையில் புத்த சமயத்தைப் பாதுகாக்க முடியாது எனும் எண்ணத்தினாலாகும்.
(2) அனுலா எனும் அரசியை மதநிலைப்படுத்தினால் தேவநம்பிய தீச அரசனின் வெறுப்புக்கு உள்ளாக நேரிடும் எனும் எண்ணத்தினாலாகும்.
(3) பெண்களைத் துறவு நிலைப்படுத்த போதுமானளவு பிக்குகள் மகிந்ததேரருடன் வந்திருக்காமையினாலாகும்.
(4) அனுலா அரசி உள்ளிட்டவர்களைத் துறவு நிலைப்படுத்துவதற்கு வேண்டியளவு அடிப்படை புத்த மத அறிவுத் தகைமையை அவர்கள் பெற்றிருக்காமையாலாகும்.
(5) பெண்களைத் துறவு நிலைப்படுத்துவது பிக்குணிகளால் மட்டுமே நிறைவேற்றப்படலாம் என்ற ஒழுக்க விதியினாலாகும்.

38. இலங்கையில் முதன் முறையாக 'மாகாத ஆக்ஞா' சட்டமாக அமுல்படுத்தப்பட்டது,
(1) வலகம்பா அரசனால்
(2) சிரி சங்க போ அரசனால்
(3) துட்டகைமுனு அரசனால்
(4) ஆமண்ட காமினி அரசனால்
(5) மகாசேன அரசனால்

39. அனுராதபுர காலத்தில் முக்கிய விகாரைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு பௌத்த விழாக்களும் சமயச் சடங்குகளும் ஆரம்பமாகின. கித்சிரிமெவன் அரசன் காலத்தில் எந்த விகாரையை அடிப்படையாகக் கொண்டு 'தலதா' பூஜை ஆரம்பிக்கப்பட்டது?
(1) மகாவிகாரையை
(2) அபயகிரி விகாரையை
(3) சேத்தியகிரி விகாரையை
(4) ஜேத்தவன விகாரையை
(5) தக்கிணகிரி விகாரையை

40. 'ஸீஹல ஸங்க' எனும் பெயரினால் அழைக்கப்படும் நிகாயாவாவது,
(1) பர்மிய பிக்கு ஒருவரால் பர்மாவில் அமைக்கப்பட்டது.
(2) பர்மிய பிக்கு ஒருவரால் இலங்கையில் அமைக்கப்பட்டது.
(3) இலங்கை பிக்கு ஒருவரால் பர்மாவில் அமைக்கப்பட்டது.
(4) இலங்கை பிக்கு ஒருவரால் சீனாவில் அமைக்கப்பட்டது.
(5) இலங்கை பிக்குணி ஒருவரால் சீனாவில் அமைக்கப்பட்டது.

41. மரபுவழி 'சிந்தோ' பக்தர்களின் கடும் எதிர்ப்புகளைக் கருத்திற் கொள்ளாது வாழ்க்கையைத் தியாகம் செய்து யப்பானில் புத்த சமயத்தை ஸ்தாபிப்பதில் முன்னோடியாகச் சேவை புரிந்தவர்,
(1) ஸொக வம்சத்தவர்
(2) மொனொனொபெ வம்சத்தவர்
(3) நகதொமி வம்சத்தவர்
(4) நகமுர வம்சத்தவர்
(5) பியூஜிவர வம்சத்தவர்

42. இறந்து போன உறவினர்களுக்காக யப்பானிய பௌத்தர்களால் விமரிசையாகக் கொண்டாடப்படும் பௌத்த விழா,
(1) ஹனமத்சுரி (2) ஜொ தோ ஏ (3) நெகன் ஏ (4) பொன் (5) ஹிகன் ஏ

43. சீன மக்களிடையே சுய நம்பிக்கை, அர்ப்பணிப்பு, ஒழுக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தி சீன புத்த தர்மத்தை புதிய வழியில் இட்டுச் சென்ற போதிதர்ம பிக்குவால் அறிமுகப்படுத்தப்பட்ட மரபாவது,
(1) மாத்யமிக (2) யோகாசார (3) சர்வாஸ்திவாதீ (4) தேரவாத (5) தியான

44. 'தூபரஹ' என்பது தூபிகளின் நிர்மாணிப்புடன் நேரடியாகத் தொடர்புடையதொன்றாகும். 'தூபரஹ' என்பதன் கருத்து,
(1) தூபி பூஜையின் மூலம் அருகதநிலையை அடைய முடியும் என்பதாகும்.
(2) தூபிகளை நிர்மாணித்து அவற்றைப் பூஜிப்பதற்கு பொருத்தமானது என்பதாகும்.
(3) அருகதநிலையை அடைந்தவர்களுக்காகத் தூபிகள் கட்டப்படவேண்டும் என்பதாகும்.
(4) தூபி வணக்கத்தின்போது புத்தரின் நற்பண்பான 'அருகதநிலை' யை நினைவுகூறவேண்டும் என்பதாகும்.
(5) புத்தர், பஸேக புத்தர், புத்தரின் சிஷ்யர்கள், போதிசத்வர் ஆகிய நான்கு பகுதியினருக்கு மட்டுமே தூபிகள் கட்டப்படவேண்டும்; ஏனையவர்களுக்காக இது கட்டப்படக்கூடாது என்பதாகும்.

45. தூபியின் ஒவ்வொரு பகுதியின் மூலமும் பல்வேறு கருத்துகள் குறிப்பிடப்படுவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைவாக தூபியின் உட்பகுதியினால் எடுத்துக்காட்டப்படுவது,
(1) எண்பத்து நான்காயிரம் தர்ம விடயங்கள் (தர்மஸ்கந்த)
(2) புத்தரின் நற்பண்புகளின் பெருமை
(3) நவங்க ஸத்து சாசனம்
(4) ஸத்திஸ் போதிபாக்ஷிக தர்மம்
(5) ஆர்ய அஷ்டாங்கிக மார்க்கம்

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

46. தூபியின் பாதுகாப்பு, தூபி வழிபாட்டில் ஈடுபடும் பக்தர்களின் வசதி, பாதுகாப்பு என்பவற்றுக்காக சில பழமையான தூபிகளைச் சுற்றிவரக் கட்டப்பட்டுள்ள 'சேதிய கர'வுக்கான தெளிவான உதாரணமாவது,
(1) தூபாராம (2) அபயகிரி (3) ஜேத்தவன (4) அட்டதாகே (5) ஹெட்டதாகே

47. புத்தர் பரிநிர்வாணமடைந்ததிலிருந்து நீண்டகாலம்வரை புத்தர் சிலை **அமைக்கப்படாதமையில்** செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணமாவது,
(1) இந்தியக் கலைஞர்கள் புத்தர் சிலையை அமைப்பதில் போதுமானளவு அறிவு பெற்றிராமை
(2) புத்தர் ஒப்புவமையில்லாத ஒருவராகக் காணப்படாமை
(3) புத்தர் போன்ற உத்தம மனிதரின் சிலையை வடிக்கப் பயந்தமை
(4) தூபி நிர்மாணத்தை புத்தர் அனுமதித்திருந்த போதிலும் புத்தர் சிலையை அமைக்க அவர் அனுமதி வழங்கியிருக்காமை
(5) புத்தர் சிலையை அமைக்கும் தேவை ஏற்பட்டபோது புத்தரை நேரடியாகக் கண்டவர்கள் எவரும் உயிருடன் இல்லாதிருந்தமை

48. இலங்கைக் கலைஞர்கள் பலவித முத்திரைகளைக் கொண்ட புத்தர் சிலைகளை நிர்மாணித்துள்ளனர். அவற்றுள் 'அவுக்கன' சிலையினால் சித்தரிக்கப்படுவது,
(1) வரத முத்திரை (2) கடக முத்திரை (3) விதர்க முத்திரை (4) அபய முத்திரை (5) தர்மசக்ர முத்திரை

49. சிருங்கார உணர்வுகளை ஏற்படுத்தும் அல்லது காமத்தைத் தூண்டும் வகையிலான ஓவியங்கள் பண்டைய விகாரை ஆராமைகளில் நிர்மாணிக்கப் **படாமைக்கான** காரணமாகக் கருதப்படத்தக்கது,
(1) புத்த சமயம் உலகியலைப் புறக்கணித்தமை
(2) பண்டைய கலைஞர்களுக்கு அழகியல் ரசனை அனுபவம் இல்லாமை
(3) ஒழுக்க விதியின் மூலமாக ஓவியம் வரைதல் சம்பந்தமான வரையறை நியதிகள் பிக்குகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தமை
(4) விகாரை ஆராமைகளில் அத்தகைய ஓவியம் வரைதல் அரச ஆணையினால் தடைசெய்யப்பட்டிருந்தமை
(5) அத்தகைய ஓவியம் வரைதல் பக்தர்களின் திருப்தியின்மைக்கு ஏதுவானமை

50. பௌத்த கதைப் பொருளைக் கருவாகக் கொண்ட அமாவதுர, புத்சரண, ஜாதக நூல்கள், சத்தர்ம ரத்னாவலி போன்ற பழைமையான உரை இலக்கிய ஆக்கங்களை வாசித்து ரசிப்பதிலும் பார்க்க, கேட்டு ரசிப்பதற்கு ஏற்றவாறு போதனை நுட்பத்துடன் ஆக்கப்பட்டமைக்கு முக்கிய காரணமாக இனங்காணக் கூடியது,
(1) பழமையான இலக்கிய கர்த்தாக்கள் வேறு மொழி அறிவு இல்லாதிருந்தமை
(2) இலக்கிய கர்த்தாக்கள் போதனை முறையைப் பெரிதும் விரும்பியமை
(3) பௌத்த கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய ஆக்கங்களை போதனை முறையில் மட்டும் ஆக்குதல் வேண்டுமென்ற உடன்பாடு காணப்பட்டமை
(4) முன் உதாரணமாகக் கொள்வதற்கு போதனை முறை நுட்பம் தவிர்ந்த வேறு நுட்பமுறையில் ஆக்கப்பட்ட உரைநூல்கள் இல்லாதிருந்தமை
(5) எழுத்தை வாசிப்பதற்கு அறியாதிருந்தமையால் கேட்டு அனுபவிப்பதற்கு பெரும்பாலானோர் பழகியிருந்தமை

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

6. (i) முதலாவது சமய தூதுக் குழுவின் சேர்மானம் பற்றி விளக்கி, புத்தசாசனத்தின் பரவலுக்கு அதன் மூலம் கிடைத்த உதவிகளை எடுத்துக்காட்டுக.
(ii) மூன்றாவது பௌத்த மகா சபையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சாசனத்தின் நல்நிலவுகைக்கு ஏதுவான விதத்தை விளக்குக.
(iii) தர்மாசோக சக்கரவர்த்தியின் சாசனப் பணிகளை உதாரணங்களுடன் மதிப்பிடுக.
(iv) நாலந்தா பல்கலைக்கழகத்தில் நிலவிய கல்வி மற்றும் நிர்வாகச் செயன்முறை பற்றி விவரணப்படுத்துக.

7. (i) பௌத்தத்துக்கு முற்பட்ட இலங்கையில் நிலவிய சமய நம்பிக்கைகளை வரலாற்று மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
(ii) அனுராதபுரக் காலத்தில் இலங்கை அரச நிர்வாகத்தில் பிக்குகளின் தலையீடு எவ்வாறிருந்தது என்பதனை ஆராய்க.
(iii) பர்மாவின் மக்கள் வாழ்க்கை பௌத்த சமயத்தினால் போஷிக்கப்பட்டிருந்த வகையினை விளக்குக.
(iv) யப்பானியர்களின் வெற்றிக்கு புத்த சமயத்திலிருந்து கிடைத்த வழிகாட்டலை எடுத்துக்காட்டுக.

8. (i) இலங்கையிலுள்ள தூபி அமைப்புகளை அறிமுகப்படுத்தி தூபிகளினால் சித்திரிக்கப்படும் கருத்துக்களை விளக்குக.
(ii) பொலன்னறுவை கல்விகாரையில் அமைக்கப்பட்டுள்ள சிலைகளின் விசேட இயல்புகள் யாவையென எடுத்துக்காட்டுக.
(iii) சந்திர வட்டக்கல்லின் ஒவ்வொரு பகுதியும் சித்திரிக்கும் குறியீட்டு விளக்கங்கள் பற்றிய விமர்சகர்களின் கருத்துகள் **இரண்டினை** எடுத்துக்காட்டுக.
(iv) புத்தர் தொடர்பான பக்தி சிரத்தையை (சிரத்தா) ஏற்படுத்துவதற்காக பாடல் இலக்கியத்தின் மூலம் கிடைக்கும் உற்சாகத்தை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.

※ ※ ※

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka